தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 27, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 ஏப்ரல் 10, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.”

நேர்மையும் நெஞ்சுறுதியும் ஒருவருக்கு இருந்தால், அவரது சொல்லில் நீதியும் நியாயமும் இருக்கும். அதற்குப் பெயர்தான் நடுவுநிலைமை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

புதிய அணை

***21449—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்–ஆழியார் திட்டத்தில் ஆனைமலையாறு–நல்லாறு திட்டத்தின்கீழ் புதிய அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆனைமலையாறு–நல்லாறு திட்டத்தைத் துவக்க கேரள அரசு இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே, இப்பொருள் தொடர்பாக கேரள மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏதுவாக, 2021 ஜூலை மாதத்தில் அரசு கூடுதல் செயலாளர், பொதுப் பணித் துறை மட்டத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்க தமிழக அரசால் 2021, அக்டோபரில் தொழில்நுட்பத் துணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது கேரள அரசின் பொதுப் பணித் துறை அதிகாரிகளிடையே கூட்டம் நடத்தி, திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முனைப்பான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கேரள அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றபின் ஆனைமலையாறு–நல்லாறு திட்டம் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தேர்தல் அறிக்கைகளில் அரசியல் கட்சிகள்தான் ஆனைமலையாறு–நல்லாறு திட்டம் அமைக்கப்படும் என்று 60 ஆண்டுக் காலமாக கொங்கு மண்டல விவசாயிகளிடத்தில் வாக்குறுதி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். முதல் முறையாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக கேரள மாநில முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதி, தொலைபேசியின்மூலம் தொடர்பு கொண்டு, இதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கி, 25–9–2019 அன்று நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களையெல்லாம் அழைத்துக்கொண்டு திருவனந்தபுரம் சென்று, பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அரசுத் துறைச் செயலாளர் தலைமையில் 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினர் சிறப்பாகச் செயல்பட்டு, ஒரே மாத காலத்தில் கேரள மாநில அதிகாரிகளோடு 12–12–2019 அன்று சென்னையில் கூடிப் பேசினார்கள். அதன் பிறகு, 2020–ல் கொரோனா நோய்த் தொற்று பாதிப்பு வந்துவிட்ட காரணத்தினால் நம்முடைய தமிழக அதிகாரிகள் 11–9–2020

2023 ஏப்ரல் 10]

அன்றுதான் திருவனந்தபுரம் சென்று பேச்சுவார்த்தை நடத்தி வந்தார்கள். இவையல்லாமல், இடையிடையே அதிகாரபூர்வமற்ற பேச்சுவார்த்தைகளை பாலக்காட்டிலும், பொள்ளாச்சியிலும் இரு மாநில அதிகாரிகளும் நடத்தி, ஒரு சுமூகமான முடிவு எட்டப்படுகிற நேரத்தில் தேர்தல் வந்துவிட்ட காரணத்தினால், இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை.

தற்போது கேரள மாநில முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. பினராயி விஜயன் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் உள்ள காலத்திலேயே இந்தத் திட்டத்தைப் பற்றிப் பேசினால் மட்டும்தான் இது முடிவுக்கு வரும். அவர், இரு மாநிலங்களும் சகோதர மாநிலங்கள் என்ற மனப்பான்மையுடையவர். எனவே, இந்த அரசு இதில் தீவிர கவனம் செலுத்திட வேண்டும். முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அமைத்த பாதையிலே, ஆனைமலையாறு-நல்லாறு திட்டம் மட்டுமல்லாமல், பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்திற்கும் சுமூகமான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, நல்ல முடிவுகள் எட்டப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கருத்தில்கொள்ள வேண்டும். காவேரி நீர்ப்பாசனத்திற்கு அடுத்தபடியாக பரம்பிக்குளம்-ஆழியாறு நீர்ப்பாசனத் திட்டத்தின்மூலம் 4½ இலட்சம் ஏக்கர் விவசாயிகள் பயன்பெறுகிறார்கள். எனவே, அதை மனதில்கொண்டு, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் இதில் தீவிர கவனம் செலுத்தி, இத்திட்டத்தை விரைந்து முடித்துக் கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கேள்வி நேரம். ஜாடைமாடையாகக்கூட குற்றம் சொல்லக் கூடாது. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இதில் முனைப்புக் காட்டினார் என்று சொல்வதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால், அவர்கள்தான் முனைப்புக் காட்டினார்கள் என்பதைப்போல சொல்வதுதான் ஒரு மாதிரியாக இருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக முதன்முதலில் பேச்சுவார்த்தையைத் தொடங்கியதே இந்த துரைமுருகன்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 1989-ல் நான் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே*

பேச்சுவார்த்தை நடத்தினேன். இதுவரையில் உங்கள் மந்திரிகள் மற்றும் எங்கள் மந்திரிகளால் 10 முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் மத்தியில் 18 முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. மொத்தம் 28 முறை பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம்.

முற்பகல் 10–05

ஆனால், இதுவரையில் நடந்த பேச்சுவார்த்தையினால் ஏற்பட்ட வித்தியாசம் என்னவென்று கேட்டால்-- ஆனைமலையாறில் நாங்கள்தான் அணை கட்டுவோம்; நாங்கள்தான் அணை கட்டி அந்தத் தண்ணீரை உங்களுக்குக் கொடுப்போம் என்ற வாதத்தில் மிகவும் பிடிவாதமாக இருந்தார்கள். இப்போது கொஞ்சம் இறங்கி வந்து என்ன சொல்லியிருக்கிறார்களென்றால், நீங்களே அணை கட்டிக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். ஆனால், ஆனைமலையாறிலும், நல்லாறிலும் உள்ள சட்டம், ஆனைமலையாறிலிருந்து 2½ TMC தண்ணீர் நமக்கு வரவேண்டும். அந்தத் தண்ணீரை எப்போது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்களென்றால், இடமலையாறு திட்டம் முடிந்ததற்குப் பிறகு நீங்கள் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். இடமலையாறு திட்டம் முடிவடைந்து நீண்ட நாட்களாகிவிட்டது. இட்லியாறும் முடிந்து ரொம்ப நாளாகிவிட்டது; எல்லாம் சட்னியாறாக முடிந்துவிட்டது. இப்போது மேல்நீராறிலிருந்து தண்ணீரை 4 மாதங்களாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதையும் எடுக்க முடியவில்லை. நீங்கள் சொன்ன மாதிரி, மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் lenient ஆக இருக்கக்கூடியவர்; நியாயமாக இருக்கக்கூடியவர்தான், நான் இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக குழு ஒன்று போட்டிருக்கிறார்கள். ஆகையால், அவர்களிடத்தில் மறுபடியும் பேசச் சொல்லியிருக்கிறேன். இந்தச் சட்டமன்றம் முடிந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அளவில் பேசி, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று நான் நினைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஓராண்டில் மட்டும் பரம்பிக்குளம் அணையிலிருந்து 15 TMC தண்ணீரும், சோலையாறு

2023 ஏப்ரல் 10]

அணையிலிருந்து 5 TMC தண்ணீரும், பொள்ளாச்சி சமவெளி-plains பகுதியில் பெய்த மழை ஆழியாறு அணையின்மூலம் 10 TMC தண்ணீரும் வீணாக அரபிக் கடலுக்குச் சென்று கலந்திருக்கிறது என்பதை அண்ணன் அவர்கள் அறிவார்கள்.

இப்போது இதில் என்ன பிரச்சினையென்றால், மேல்நீராறிலிருந்து கீழ்நீராறு, கீழ்நீராறிலிருந்து சோலையாறு, சோலையாறிலிருந்து பரம்பிக்குளம், பரம்பிக்குளத்திலிருந்து பெருவாரிப்பள்ளம், பெருவாரிப்பள்ளத்திலிருந்து தூணக்கடவு இத்தனை அணைக்கட்டுகளையும் தாண்டி, சர்க்கார்பதி வந்து, சர்க்கார்பதியில் மின்சாரம் தயாரித்து, 48 கிலோ மீட்டர் Contour Canal என்ற சமமட்ட கால்வாய் வழியாகச் சென்று திருமூர்த்தி அணையை அடைவதற்குள் 30% தண்ணீர் சேதாரமாகிவிடுகிறது. முழுமையாக விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைப்பது அரிதாக இருக்கிறது.

எனவே, மேல்நீராறிலிருந்து ஒரு சுரங்கப் பாதை அமைத்து, நல்லாறு அணை அமைத்தால் அதில் 7½ TMC தண்ணீரைத் தேக்கி, அதிலிருந்து ஒரு சுரங்கப் பாதை அமைத்து, 4½ கிலோ மீட்டர் வரை கொண்டு சென்று, 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு சமமட்ட கால்வாய் அமைத்தால், திருமூர்த்தி அணைக்கு இரண்டு வகையில் தண்ணீர் கிடைக்கும். நல்லாறு அணையிலிருந்தும் தண்ணீர் கிடைக்கும். ஏற்கெனவே வந்து கொண்டிருக்கின்ற Contour அணையிலிருந்தும் தண்ணீர் கிடைக்கும். இதன்மூலம் இடைவிடாத விவசாயம் நடைபெறுவதற்கான ஒரு வாய்ப்பு உண்டு என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். இதேபோல, இன்னொரு கருத்தையும் அண்ணன் அவர்களிடத்தில் பதிய வைக்க நான் விரும்புகிறேன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் கேள்விக்கு, அவர்கள் அழகாக பதில் சொல்லிவிட்டார்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: இன்னொரு கேள்வியும் அதில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேரளாவில் இருக்கிறது. இப்போது அணை கட்டச் சொல்லியிருக்கிறார்கள். அணை கட்டுவதற்கு அனுமதி வாங்கியதற்குப் பிறகு நீங்கள் சொன்ன கருத்தையெல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்விக்கு வாருங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *தமிழகத்தில் 2-வது பெரிய நீர்ப்பாசனமான பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத்தை, அணையிலிருந்து பயிரின் வேர்வரை சொட்டுநீர்ப் பாசனமாக* 'Dam to root' *என்கின்ற முறையில்* Israel *பாசன முறையைக் கொண்டுவந்து, இப்போது அதில் ஏற்படும் 20% தண்ணீர் சேதாரத்தையும் தவிர்த்து, பயிரின் வேர்வரை அணையின் தண்ணீரைக் கொண்டுபோய்ச் சேர்த்து, 4½ இலட்சம் ஏக்கரிலும் ஆண்டு முழுவதும் விவசாயம் செய்வதற்குரிய வாய்ப்பை இந்த அரசு உருவாக்கித் தருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர், பொள்ளாச்சிக்காரர்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் இல்லை, உறுப்பினர்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அவர் அமைச்சராக இருக்க வேண்டியவர்.* He has got vast knowledge and he is a Senior Member. *அவருக்குக் கொடுக்காததில் வருத்தப்படுபவரில் நானும் ஒருவன். திரு. ஜெயராமன் அவர்கள் பொள்ளாச்சியைச் சேர்ந்தவர். அவருடைய தொகுதியின் கடைமடையில்தான் இந்தத் திட்டமிருக்கிறது. எனவே, அதுகுறித்துத் தெளிவாக அறிந்திருக்கிறார் என்பது அவருடைய பேச்சிலிருந்து தெரிகிறது. அந்தத் திட்டம் நிறைவேற வேண்டுமென்பதில், அவருக்குக் கட்டுங்கடங்காத ஆர்வம் இருப்பதும் பாராட்டுக்குரியதுதான். நான் இல்லையென்று சொல்லவில்லை.*

மேல்நீராறு, கீழ்நீராறு, சோலையாறு, தூணக்கடவு, பெருவாரிப்பள்ளம், சர்க்கார்பதி போவதற்கு 150 கி.மீ. தூரம் ஆகும். மேல்நீராறிலிருந்து நல்லாறுக்கு தண்ணீரைக் கொண்டு வந்தால், 20 கிலோ மீட்டருக்குள் முடிந்துவிடும் என்பதுதான் நம்முடைய

திட்டம். அதில் ஒன்றும் மாறுபட்ட கருத்தல்ல. ஆகையால், இந்தத் திட்டம் நிறைவேறத்தான் வேண்டும்.

இரண்டாவது, மடைவிட்டு மடை பாசனம் என்கின்ற பாசனத்தை, மாண்புமிகு திரு. பழனிசாமி காலம் முதல் நீண்ட காலமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். மோகனகிருஷ்ணன் கமிட்டி அமைத்து நான்தான் அதை நடைமுறைப்படுத்தினேன். PAP-ஐப் பொறுத்தவரையில், நான் இத்தனை ஆண்டுக் காலம், கிட்டத்தட்ட 1989–லிருந்து இந்த இலாகாவிற்குப் பொறுப்பு வகிக்கிறேன். எனக்கு மிகப் பிடித்தமான ஒரு scheme அது. ஏனென்றுகேட்டால், இந்தியாவிலேயே வேறு யாரும் செய்ய முடியாத சாதனையைச் செய்தவர்கள்.

முற்பகல் 10–10

ஆனைமலையில் ஓடுகிற தண்ணீர் மேல்நீராறு, கீழ்நீராறு சோலையாறு, தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளத்திலே மேற்கு நோக்கி ஓடுகிறது. அதைத் திருப்பி எட்டு அணைகளைக் கட்டி Tunnel மூலம் கொண்டுவந்து பயன்படுத்துகிற திட்டம் இந்தியாவிலேயே PAP systemதான். அது ஒரே ஒரு unique system. அந்தத் திட்டத்தை அன்றைக்கு ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லி செய்தவர்கள். அந்தத் திட்டத்தில் கையெழுத்து போட்டவர்கள் பெருந்தலைவர் காமராஜரும், இ.எம்.எஸ் நம்பூதிரிபாட்டும். 1958–ல் போடப்பட்ட அந்தத் திட்டத்திற்கு மறுபடியும் retrospective effect கொடுத்தவர் கலைஞர் அவர்கள். அந்தத் திட்டம் பாதுகாக்கப்பட வேண்டும். மேலே சொன்னால், இதுமாதிரி திட்டத்தை நான் பார்த்ததே இல்லை. அந்த மாதிரி திட்டம் நம்முடைய Engineers செய்திருக்கிற திட்டம். எனவே, அந்தத் திட்டத்தை ஒவ்வொரு தமிழனும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது, என்னுடைய ஆசை. எனவே, அங்கிருக்கிற தண்ணீர் ஒரு சொட்டுகூட வீணாகக் கூடாது என்பதற்காக, Israel Model–லே அதைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், சட்டமன்றம் முடிந்ததற்குப் பிறகு ஒரு குழுகூட இஸ்ரேலுக்குச் சென்று பார்த்துவிட்டு வந்து அதை நடைமுறைப்படுத்தலாம் என்ற எண்ணமும் எனக்குண்டு.

[2023 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

122—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***182—திரு. S. பழனி நாடார்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி நகராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 544 குடிநீர்த் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு, நாளொன்றுக்கு 2,014 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 4.53 கோடி மக்களுக்கு வழங்கப்படுகிறது. முதல்நிலை நகராட்சியான தென்காசியின், தற்போதைய மக்கள்தொகை 78,891 ஆகும். இந்நகரின் தற்போதைய மக்கள்தொகையின் அடிப்படையில் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் தேவையான குடிநீர் அளவு 10.65 மில்லியன் லிட்டராகும். தென்காசி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பிலுள்ள தென்காசி–குற்றாலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் நாளொன்றுக்கு 1.70 மில்லியன் லிட்டர் குடிநீரும், நகராட்சிப் பராமரிப்பிலுள்ள தனி குடிநீர்த் திட்டம்மூலம் நாளொன்றுக்கு 4.50 மில்லியன் லிட்டர் குடிநீரும், ஆகமொத்தம் நாளொன்றுக்கு 6.20 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தென்காசி நகராட்சியில் குடிநீர் விநியோக மேம்பாட்டிற்காக, நகராட்சியின் உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு